செய்திவெளியீடுஎண்:167 நாள்:25.02.2021

# செய்தி வெளியீடு

அறிவியல் நகரம் வர இருக்கும் தேசிய அறிவியல் தினத்தை முன்னிட்டு 26.02.2021 அன்று தமிழ்நாடு முதுநிலை அறிவியலாளர் விருதுகள் – 2018, தமிழ்நாடு இளநிலை அறிவியலாளர் விருதுகள் – 2018, சிறந்த அறிவியல் ஆசிரியர் விருதுகள் 2018–2019 & 2019–2020 மற்றும் ஊரக கண்டுபிடிப்பாளர் விருதுகள் 2018–2019 ஆகிய விருதுகளை வழங்கிட உள்ளது.

மேற்கண்ட இவ்விருதுகள் மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன், தமிழ்நாடு அரசு அவர்களால் வழங்கப்பட உள்ளது. செல்வி அபூர்வா, இ.ஆ.ப,, அரசு முதன்மைச்செயலர், உயர்கல்வித் துறை, தலைமைச்செயலகம் மற்றும் திரு ராஜேஷ் லக்கானி, முதன்மைச் செயலர் / துணைத்தலைவர் (முகூபொ), அறிவியல் நகரம் அவர்கள் முன்னிலை வகிக்கிறார்கள். இவ்விருதுகள் வழங்கும் நிகழ்ச்சி பிர்லா கோளரங்க வளாகம், காந்தி மண்டபம் சாலை, சென்னை – 600 025 ல் உள்ள அறிவியல் நகர அலுவலக அரங்கத்தில் 26.02.2021 அன்று மாலை 4.30 மணி அளவில் நடைபெற உள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**